செ.வெ.எண்: 528/2016 நாள்: 13.08.2016

க.எண்.ஒ5/103/2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்

<u>பத்திரிகைச் செய்தி</u>

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியக்காவிளை வருவாய் கிராமத்தில் (வன்னியூர் ஊராட்சி பகுதிக்கு மட்டும்) மேக்கோடு அரசு உயர்நிலைப் பள்ளியில் வைத்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் மனுநீதித்திட்ட (இரண்டாம் கட்டம்) நிறைவு நாள் நிகழ்ச்சி, 19.08.2016 (வெள்ளி கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேக்கோடு அரசு உயர்நிலைப் பள்ளியில் 28.07.2016 அன்று நடைபெற்ற மனுநீதி திட்ட முதல் கட்ட நிகழ்ச்சியின் போது பெறப்பட்ட மனுக்களுக்கான உரிய பதில்கள் இந்த இரண்டாம் கட்ட நிறைவு நாள் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும். மேலும் இந்த நிகழ்ச்சியில் துறைவாரியாக அரசு நலத்திட்ட விபரங்களும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

எனவே, வன்னியூர் ஊராட்சிப் பகுதிக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.